வள்ளல் யார்?

மற்றும்

அறுபத்து மூவர் வரலாறு

கவிதை





ஆக்கம் : சித்தாந்த நன்மணி, சித்தாந்த ரத்னா

கவிதை கணேசன்

www.kavithaiganesan.wordpress.com / cell : 09245103471




வள்ளலார் வரலாறு பாடல் DVD வெளியீடு

ஜானகிராமன் SMQC M.வீரசண்முக மணி I.A.S., K.சண்முகம் I.A.S., Finance Secretary, Tamilnadu



வடலூர் திருவருட்பா இசைவிழா - கவிதை கணேசன்



வடலூர் 24ம் ஆண்டு இசைவிழா
வள்ளலார் வரலாறு - கவிதை கணேசன்

கவிதைக்காக
மாண்புமிகு. ஜனாதிபதி அவர்களின் நன்றி மடல்

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA

23 FEB 2000

20 January, 2000

Dear friend,

Thank you for your kind message of greetings and good wishes on the occasion of the New Year. I wish you and your family a happy, prosperous and bright New Year.

Yours sincerely,

Narayanan K.R.

(K. R. NARAYANAN)

भारत सरकार सेवार्थ
ON INDIA GOVERNMENT SERVICE

கவிதைக்காக
மாண்புமிகு. துணை ஜனாதிபதி அவர்களின் நன்றி மடல்

VICE PRESIDENT'S RESIDENCE
NEW DELHI-110011

ஜனவரி 10, 1987

அன்புடையீர்,

கவிதை வடிவில் தாங்கள் அனுப்பிவைத்த புத்தாண்டு வாழ்த்து கிடைத்தது. நன்றி.

அன்புடன்,


ஆர். வெங்கட்ராமன்

(ஆர். வெங்கட்ராமன்)

திரு. ஜே. கணேசன்,
செயலர்,
பண்ருட்டி நண்பர்கள் நுண்கலை மன்றம்,
பண்ருட்டி.

2/5

வள்ளலார் (வள்ளல் யார்?)





(கவிதை **J. கணேசன்,** B.Sc., M.A., DMQC, TNCSC, கிருஷ்ணகிரி)

முன்னுரை :

வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளல் இராமலிங்கம் அவர்கள் சிதம்பரம் அருகில் மருதூரில் தோன்றி இறையருள் பெற்று, அட்டமா சித்தியடைந்து, அருட்பா இயற்றி ஆன்மநேயத்தை உலகுக்கு அளித்து வடலூரில் சன்மார்க்க கொடி, சங்கம், தருமசாலை, பள்ளி, சபை இவற்றை அமைத்து மனிதகுலம் உய்ய சமரச சுத்த சன்மார்க்க வழியைக் காட்டியுள்ளார்கள். அப்படிப்பட்ட மகானின் சரித்திரத்தை 70 வரிகளில் இயம்பி உள்ளேன். குறை, நிறை சுட்டுமாறு வேண்டுகிறேன்.

திகழும் தில்லையம்பலத் தாடிட சிவனார்
புகழும் எல்லையம்பதி மருதூர் ராமையனார்
மகவாய் பிறந்துலக மாயைகள் மாற்றிட
வகையாய் சின்னம்மை வயிற்றில் தான்மலர்ந்து
தருமமிகு சென்னையில் தமையன் இல்லமர்ந்து
கருமமிகு ஞானமதால் கவிதைகள் சொல்லாய்ந்து
கந்தக் கோட்டத்தும் ஒற்றியூர் இறையையும்
சித்தர் போற்றிட்ட பெற்றியில் உரையையும்
எதுகையும் மோனையும் ஏங்கிட தானமர்த்தி
பல்லோர் சொல்லோர் சபைதனில் சொல்லாற்றி
அக்காள் மகள்தனை மணந்துபின் நீங்கி
கருங்குழி தன்னில் தண்ணீர் விளக்கேற்றி
சொற்களால் விரித்து புராண இதிகாசத்து
பற்காலத்து பிரித்த ஞானத்தை இக்காலத்து
சுத்த சன்மார்க்க சுகமான பிழிவாக்கி
வித்தக அன்பர்க்கு விரிவான வழியாக்கி
தரும சாலையை கருணையால் தயைசெய்து
பசித்த வயிற்றுக்கு புசிக்க உணவளித்து
சிந்தை குளிர்ந்திட ஜீவகாருண்ய தேனூற்றி
எந்தை ஒளிர்ந்திட ஜோதியின் கனிபிழிந்து
பல்லாயிரம் பாடலால் எழுத்தினில் வித்தைசெய்து
ஆறுதிருமுறை அருட்பா அகவல் அருளி
மனித உடலின் மர்மம் அர்ச்சித்து
கண்ணி தூதுளை வடிசாதம் வெந்நீர்
கற்கண்டு தேனோடு பேயன் செந்தூரம்

2/5

பொற்றலை கையாந்தகரை தாம்பூலம் தரிக்குமுறைசேர்த்து
உப்புபால், புளிமிளகாய் உரத்தசொல் தவிர்த்து
உதிர்ந்த உடலினை பூமியினுட் புதைத்து
இந்திரிய ஜீவகரண ஆன்ம ஒழுக்கம்சொலி
மஞ்சள் வெள்ளையில் மணிக்கொடி செய்து
வேதாந்த சித்தாந்த போதாந்த நாதாந்த
யோகாந்த கலாந்த ஷடாந்த தத்துவமளித்து •
கள்காம கொலைகளவு பொய்தனை தவிர்த்து
முக்குண மூவாசை மூவவஸ்த்தை முறித்து
சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல் விளக்கி
வேட்டவலத்து அரசியின் வெருட்சியை ஓட்டி
அருட்பா வழக்கினில் மாண்புகள் பெற்று
சத்திய ஞானசபை வடலூரில் வகைசெய்து
ஏழுதிரை நீக்கி விழுஒளி காட்டி
அண்டத்தை பிண்டத்தில் அகழ்ந்து சுட்டி
துன்மார்க்க துயரத்தை துடைத்து தொலைத்திட
சன்மார்க்க சாகரத்தை படைத்து பரவெளியை
களிக்க அணுவாக்கி எளிதில் ஏற்பிக்க
வசித்த உடல்பற்றி வகையாய் தானுணர்த்தி
உயிர்க்கொலை தவிர்த்த உயர்வழி போதித்து
ஊன்வுணா தவத்தை உணர்த்தி உய்வித்து
ஒழுவி லொடுக்க பாயிர விருத்தி
தொண்ட மண்டல சதகம் விளக்கி
உலகெலாம் என்னும் மெய்ப்பொருள் உணர்த்தி
தமிழெனும் அமிழ்துக்கு உரைசொல் எழுதி
மனுமுறை கண்டு மனதை அடக்கி

மூலிகை குணத்தை சஞ்சீவி இலைகளை
மருத்துவ சான்றுகளை மனமுடன் வழங்கி
சித்த மருத்துவ சிறப்புகள் விளித்து
முதியோர் கல்வியை முறைபட முகிழ்த்து
மும்மொழி திட்டத்தை முதலில் அறிவித்து
பொன் வண்ணத் தந்தாதி உரைசெய்வித்து
செவ்வாய் கணபதி அனுஷ்ட்டான விதிசெய்து
ஜீவகாருண்ய ஒழுக்கம் சிறப்பென சிலிர்த்து
இரசவாதம் சாகாக்கலை வாழுமுறை வகுத்து
அறுமுனை மணியின் ஒலிதனை ஒலித்து
சுழுமுனை திறந்து சுகத்தி லாழ்த்தி
பரகாயப் பரம்பொருள் பெருவெளி பளிச்சிட
அருட்பெருஞ் ஜோதியின் அருமை விளக்கி
பிறவிப் பெரும்பயன் பெற்றிட விளித்து
அனைத்து உயிரையும் அன்பினால் பிடித்து
ஆன்ம நேயத்தை அனைவர்க்கு மளித்து
சித்தி வளாகப் பெருமாளிகை அறையில்
வெட்ட வெளியில் காற்றொடு கலந்தனரே!
வடலூர் கடலூராகையில் திரும்புவதாய்ச் சென்றனரே!

குறிப்பு : பாடலை இசையுடன் நெட்டில் பார்க்கலாம் – கேட்கலாம்.
www.youtube.com-ல் Vallalar varalaru Padal 1,
Vallalar varalaru Padal 2, Vallalar Varalaru Kavithai Ganesan,
or google-ல் Kavithaiganesan என்று type-செய்தால் மேற்கண்ட
பாடலை பீம்ப்ளாஸ் ராகத்தில் இசையுடன் கேட்கலாம்.
googleல் quality control tncsc kavithaiganesan என்னும்
வலைதளத்தில் வள்ளலார் வரலாறு DVD வெளியீட்டு
விழாவைக் காணலாம். செல் : 92451 03471.

2/5

நமசிவாய நம்தொண்டர் அறுபத்தி மூவர் வரலாறு

ஆழிசூழ் உலகெலாம் கயிலையான் ஆண்டிருக்க
குமரிமுனை முக்கடலும் கலந்தொன்றாய் சங்கமிக்க
அறுபத்து மூவரது வாழ்வதனை நாம்நோக்க
பலாமுந்திரி பண்உருட்டி கவிதை கணேசன் படைத்திருக்க

1. சோழநாட்டு நாகையிலே பொன்மீன் சிவனுக்களித்து
   ஆவணி ஆயில்யத்தில் **அதிபத்தநாயனார்** முக்திபெற
2. அந்தணராய் திங்களூரில் நாவுக்கரசர்க்கு, மகனிறக்க
   அமுதளித்து தைமாத சதயத்தில் **அப்பூதி** ஒளிசேர
3. வணிகராய் பழையாறையில் சிவனடியார் கோவணத்திற்கு
   மனைவிமக்களோடு தம்மையும் ஈடாக்கி சிவத்தொண்டில்
   ஆனிமாத பூரத்தில் **அமர்நீதியார்** அரனடைய
4. வேளாளராய் கணமங்களத்து சிவநிவேதனம் சிந்தியதால்
   கழுத்தரிந்து தை திருவாதிரையில் **அரிவட்டாயர்** இறையடைய
5. இடையராய் மங்கலவூரில் ஐந்தெழுத்தை குழலிலூதி
   கார்த்திகை அத்தத்தில் **ஆனாயர்** பதம் ஏக
6. சைவராய் நாவலூரில் சுந்தரரை மகனாயீன்று
   சித்திரையில் சித்திரைமீனில் **இசைஞானியார்** பரமன்சேர
7. கொடும்பாளூர் அரசராகி சிவனடியார்க்கு நெல்திருடியவரை
   அடியராக்கி ஐப்பசி கார்த்திகையில் **இடங்கழியார்**ஏக
8. காவிரிபூம்பட்டிண வணிகராகி சிவனடியார்க்கு மனைவி ஈந்து
   மார்கழி உத்திரத்தில் **இயற்பகையார்** இறைசேர
9. இளையான்குடி வேளாளராகி மழைஇரவில் வயல்நெல்லை
   கூரைஎரித்து உணவளித்து ஆவணிமகத்தில் **மாறன்**மறைய
10. திருத்தலையூர் அந்தணராய் கழுத்தளவு குளநீரில்
    உருத்திரஜபம் இயற்றி புரட்டாசி அசுவணியில் **பசுபதி** பரண்சேர
11. கருவூரில் சிவபூசை பூக்குடலையை பட்டத்துயானை பிடித்திழுக்க
    தலைவெட்டி மாசிஅத்தத்தில் **எறிபத்தர்** முக்திஏக
12. பெருமங்கலத்து வேளாளராகி சுந்தரர் சிவதூதனுப்பியதை
    இகழ்ந்தேத்தி ஆனிரேவதியில் **கலிக்காமர்** கபாலிசேர
13. எயினனூர் நாடாராகி நீற்றுநெற்றி பகைவரையே
    சிவனாய்எண்ணி மாண்டு புரட்டாசி உத்திராடத்தில் **ஏனாதி** மறைய
14. காஞ்சிபுர குறுமன்னனாகி துறவியாகி சேத்திரவெண்பா பாடி
    ஐப்பசிமூலத்தில் **காடவர்கோன்** ஆண்டவனில் ஐக்கியமாகிட
15. சீர்காழி அந்தணராய் சம்பந்தரை தலைவணங்கி
    சரியைத் தொண்டர்க்கு சிறப்பான பயிற்சிதந்து
    பங்குனி திருவாதிரையில் **கணநாதர்** கைலாயமேற

16. நெய்யின்றி மயிர்எரித்து விளக்கேற்றி **கணம்புல்லர்**
கார்த்திகை கார்த்திகைமீனில் சிவனடைந்த சீலராக

17. உடுப்பூர் வேடராகி காளத்தியருப்பருக்கு கண்களப்பி
தைமாத மிருகசீரிடத்தில் **கண்ணப்பர்** பிரான்ஏக

18. பெண்ணாடத்து வணிகராகி வேலையாள் சிவனடியாராக
மதிக்காத மனைவிகைவெட்டி தைரேவதியில் **கலிக்கம்பர்** சிவனேக

19. திருவொற்றியூர் செக்கராகி தம்இரத்தத்தால் திருவிளக்கேற்றி
ஆடிமாத கேட்டையில் **கலியநாயனார்** கயிலைஏக

20. கொடுங்காளுர் சேரனாகி சுந்தரரோடு நடராஜர்
சிலம்பொலி கேட்டு, பாசுரம் பெற்று **சேரமான்பெருமாள்**
ஆடிசுவாதியில் அரண்டியை ஞான்உலாபாடி கயிலைசேர

21. குறுநில மன்னனாகி சிவபூசை மலர்மோந்த
மனைவியின் கரம், மூக்கறிந்த **கழற்சிங்கர்** வைகாசி பரணிமறைய

22. திருக்கடவூர் சோழநாட்டில் கோவைபாடி ஆலயப்பணியாற்றி
மாசிமாதத்து பூராடத்தில் **காரிநாயனார்** சிவகழலடைய

23. காரைக்கால் சிவனைவேண்டி மாம்பழம் வரவழைத்து
பேய்வடியாய் கயிலைக்கு தலையால் நடந்துசென்ற
காரைக்கால் அம்மையும் பங்குனிசுவாதியில் பரமனை அடைய

24. திருக்கடவூர் அந்தணராகி சாய்ந்த லிங்கமதை
கழுத்தது பூமாலையாலிழுத்து சரியாக்கி, மனைவிதாலியை
காசாக்கி குங்குலியம்தந்த **குங்குலியகலயனார்** ஆவணி மூலம் ஏக

25. மணமேற்குடி அமைச்சராய் சமண பாண்டியனை
சம்மந்தரால் சைவமாக்கிய **குலச்சிறையார்** ஆவணி அனுஷம் ஏக

26. களந்தை குறுமன்னராகி தில்லைவாழ் அந்தணர்
முடிசூடாதிருக்க, அம்பலத்தானின் அடிமுடிசூடி ஆண்டிட்ட
கூற்றுவ நாயனாரும் ஆடித்திருவாதிரையில் அரனடைய

27. சிலந்தியாய் சிவபூசைசெய்து சோழநாட்டு அரசராகி
எழுபது சிவன்கோயிலை இயற்றி இறைதொண்டாற்றி
மாசிமாத சதயத்தில் **கோச்செங்கட்சோழன்** மகேசனடைய

28. நாட்டியத்தான்குடி வேளாளராகி சிங்கடி, வனப்பகையாரை
சுந்தரருக்கு அர்ப்பணித்து, சிவபூசை நெல்லுண்ட
சுற்றம்கொன்ற **கோட்புலியார்** ஆடிக்கேட்டையில் சிவபாதம்சேர

29. திருநாவலூர் ஆதிசைவராகி சுந்தரரை மகனாயீன்று
சடங்கவியார் மகளைமணம்பேசி மார்கழி திருவாதிரையில் **சடையர்**ஏக

30. திருச்சேய்ஞலூர் அந்தணராகி அபிடேகப் பால்இடறிய
தந்தைகால்வெட்டி **சண்டேசரனாய்** தைஉத்திரத்தில் சிவபதி ஏக

31. விரிஞ்சியூர் வேளாளராகி சிவநிந்தனையோர் நாக்கறுத்து
சத்திநாயனார் ஐப்பசிமாத பூசமதில் ஐயனடைய

32. திருச்சங்கமங்கை வேளாளராகி புத்தமதத்தோனாய் சிவன்மீதில்
தினம்கல்எறிந்த **சாக்கியர்** மார்கழிபூராடத்து மறைய

33. திருஆக்கூர் அந்தணராகி அடியவர்க்கு அமுதொடு
பொன்ஈந்து **சிறப்புலிநாயனார்** கார்த்திகை பூராடம் மறைய

34. செங்காட்டாங்குடி அந்தணராகி வாதாபி போர்முடித்து
பிள்ளைக்கறி அடியார்க்கீந்த **சிறுதொண்டர்** சித்திரை பரணியில்ஏக

35. நாவலூர் சைவராகி திருத்தொண்டத் தொகைபாடி
சிவனையே தூதனுப்பி, முதலையுண்ட மகன்எழுப்பி
தேவாரத்து **சுந்தரர்** ஆடிசுவாதியில் சோதியில்கலக்க

36. தஞ்சை வேளாளராகி கழற்சிங்கர் மனைவிசிவபூசை
மலர்முகர மூக்கறிந்து **செருத்துணையார்** ஆவணிபூசம்மறைய

37. திருஅம்பர் அந்தணராகி வேதவேள்வி பலசெய்து
சுந்தரரை பூசைசெய்து **சோமாசியார்** வைகாசிஆயில்யம்ஏக

38. திருவாரூர் நகரமதில் குருடராய் பிறந்துமாறி
குளப்பணியாற்றி சமணர்வென்ற **தண்டியடிகள்** பங்குனிசதயம்மாற

39. காஞ்சி ஏகாலியாகி சிவனடியார் முதல்துணிதுவைத்து
துணியின்றி தலையால்கல்மோதிய **திருக்குறிப்பார்** சித்திரை சுவாதியில் ஏக

40. சீர்காழி அந்தணராகி சிவன்மனைவி பாலூட்ட
எலும்மை பெண்ணாக்கி தேவாரம்பாடி சமணர்வென்று
திருமணத்தில் உறவினரோடு வைகாசி மூலத்தில்
சிவபதியை **திருஞானசம்பந்தர்** சிறப்புடன் கலந்திருக்க

41. திருவாமூர் வேளாளராகி திருவதிகை தலம்ஏகி
திலகவதியார் சமணத்திலிருந்து சைவமாக்கிட, அரசுதண்டனையால்
கல்லைத் தெப்பமாக்கி, அரவம்தீண்டி மாண்டமகனெழுப்பி
உழவாரப்பணியுடன் தேவாரமளித்த **திருநாவுக்கரசர்** சித்திரை சதயத்தில்ஏக

42. ஆதனூர் புலையனாகி ஆடவல்லானை காணவேண்டி
தீக்குளித்து முனிவராகிய **திருநாளைப்போவார்** புரட்டாசி ரோகிணிஏக

43. தில்லையில் குயவராகி மனைவிதீண்டாது முதுமையாகி
திருவருளால் இளமையாகிய **நீலகண்டர்** தைவிசாகம்மாற

44. எருக்கத்தம்புலியூர் பாணராகி சம்பந்தர் துணையோடு
யாழிசைத்த நீலகண்டர் வைகாசிமூலத்து நாயகனடைய

45. சாத்தமங்கை அந்தணராகி சிவலிங்கத்து சிலந்தியை
வாய்வூதிய மனைவிமறந்து சம்பந்தர் மணம்நடத்தி
வைகாசி மூலத்தில் **திருநீலநக்கர்** கயிலை ஏகிட

46. சாத்தனூர் இடையராகி மூவாயிரம் ஆண்டுதவம் செய்து
திருவாடுதுறையில் திருமந்திரம் திறம்பட இசைத்து
ஐப்பசி அசுவணியில் **திருமூலர்** பரமனடைய

47. ஆரூர் அந்தணராகி தண்ணீரில் விளக்கேற்றி
அனைவரையும் அரணாய்நினைந்த **நமிநந்தி** வைகாசி பூசம்மறைய

48. நாவலூர் குறுமன்னராகி சுந்தரரை ஆதரித்து
அடியார்க்கு பொன் அளித்த **நரசிங்கமுனையரையர்** புரட்டாசிசதயம் ஏக

49. மாமதுரை அரசராகி சம்பந்தரால் சைவராகி
கூன்நிமிர்ந்த **நின்றசீர்நெடுமாறன்** ஐப்பசி பரணிமறைய

50. காம்பீலிநகர் சாலியராகி சிவனடியார்க்கு உடையளித்து
அகம் மகிழ்ந்த **நேசநாயனார்** பங்குனி ரோகிணி பரமன் அடைய

51. உறையூர் அரசராகி அறுபட்ட பகைதலைமீது
சடைகாண உயிர்துறந்த **புகழ்ச்சோழர்** ஆடிக்கிருத்திகை ஏக

52. செருவிலிபுத்தூர் ஆதிசைவராகி பஞ்சமிக சூழ்ந்தபோதில்
சிவபூசைக்கு இறைகாசளிக்க **புகழ்த்துணையார்** ஆவணிஆயில்ய மறைய

53. திருநின்றவூர் அந்தணராகி மனதிலேயே கோயில்கட்ட
மகேசன்மகிழ **பூசலார்** ஐப்பசி அனுடம் மறைய

54. பெருமிழலையூர் பெருமானாகி சுந்தரரைப் பணிந்தேத்தி
கயிலைவென்ற **குறும்பர்** ஆடிசித்திரையில் சிவனடிசேர

55. மாமதுரை அரசியாகி சம்பந்தரை நாடழைத்து
சமணரைச் சைவமாக்கிய **மங்கையர்க்கரசியும்** சித்திரைரோகிணிஏக

56. கஞ்சாறூர் வேளாளராகி மகளான மணப்பெண்ணின்
தலைமுடியை அறிந்தளித்த **மானக்கஞ்சாறர்** மார்கழிசுவாதிமறைய

57. திருப்புகலூர் அந்தணராகி சிவபிரானுக்கு மலர்சூட்டி
சம்பந்தரோடு முக்திபெற்ற **முருகநாயனார்** வைகாசிமூலம்ஏக

58. திருநீடூர் வேளாளராகி கூலிக்காய் போர்செய்து
சிவனாரை வழிபட்ட **முனையாடுவார்** பங்குனிபூசம்ஏக

59. திருவேற்காடு வேளாளராகி சூதாடி பணம்வென்று
சிவத்தொண்டு தினம்செய்த **மூர்க்கநாயனார்** கார்த்திகைமூலம்ஏக

60. சீர்மதுரை வணிகராகி திருக்கோயில் சந்தனத்திற்காய்
முழங்கையை அறைத்தளித்த **மூர்த்திநாயனார்** ஆடி கார்த்திகை மறைய

61. திருக்கோவலூர் மன்னராகி வஞ்சகர் சிவவேடமேந்த
அவரால்மாண்ட **மெய்ப்பொருள் நாயனார்** கார்த்திகைஉத்திரம்ஏக

62. மயிலாப்பூர் அந்தணராகி மனதிற்குள் அந்தரியாய்
பூசைசெய்து **வாயிலார்** மார்கழிரேவதியில் வீடுபெற

63. செங்குன்றூர் வேளாளராகி சுந்தரர் தொண்டத்தொகைபாட
தூண்டுகோலாகிய **விறன்மீண்ட நாயனார்** சித்திரைதிருவாதிரைஏக
அறுபத்திமூவரும் திருக்கோயில் சிலைகளாகி சிவபூசை
நேரமதில் அடியவர்கள் தொழும்பேற்றை பெற்றேகிட
அறுபத்திமூன்று அடியார்கள் பாதம்பணிந்து நாம்உய்வோமே!

– திருச்சிற்றம்பலம் –

ஓம் சிவாய நம

நால்வர் பாமாலை





சம்பந்தர், அப்பர்,
சுந்தரர், மாணிக்கவாசகர்
வாழ்க்கை வரலாறு
- கவிதை



ஆக்கம் : சித்தாந்த நன்மணி, சித்தாந்த ரத்னா
பண்ருட்டி : கவிதை கணேசன், பி.எஸ்.ஸி., எம்.ஏ.,

மற்றும் சிவஞான போதம் - மெய்கண்டார்



சித்தாந்த ரத்னா பட்டமளிப்பு விழா - திருவாடுதுறை ஆதீனம்



N.L.C. செந்தமிழ்ச்செல்வன் கவிதை கணேசன் கு.வைத்தியநாதன்




நெய்வேலி சைவ சித்தாந்த பயிற்சி மையம் - 2009

My Stamp



கவிதைக்காக
மாண்புமிகு. தமிழக முதல்வர் அம்மா அவர்களின் நன்றி மடல்



மிக்க நன்றி!

தமிழக முதலமைச்சர்

On I. G. S. only

THANKS

498 THIRU J. GANESAN,
QUALITY INSPECTOR,

TAMIL NADU NUGAR PORUL
VANIBAK KALAGAM,
CUDDALORE-1.

J JAYALALITHAA
Chief Minister of Tamil Nadu
Veda Nilayam
81/36, Poes Garden
Chennai - 600 086.

உ
சிவாய நம



'செந்நெறிச்செல்வர்'
மெய்ஞ்ஞான வள்ளல்'
சித்தாந்த வித்தியா சாகரம்

திரு. **கு.வைத்தியநாதன்,** இயக்குநர் அவர்கள்,
திருவாடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மையம்,
திருவிடைமருதூர்.

வாழ்த்துரை

திருப்பாதிரிப்புலியூரில் உள்ள திருவாடுதுறை ஆதீன சைவ சித்தாந்த பயிற்சி மையத்தில் எம்மிடம் சைவ சித்தாந்தம் பயின்ற மாணவர் திரு. **கவிதை ஜா. கணேசன்** அவர்கள் சைவ ஆன்றோர்கள் ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் வரலாற்றை புதுக்கவிதை வடிவில் எழுதியுள்ளார்கள். அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவில் சிறப்பாக செய்துள்ள அவர்களின் சைவப்பணியும், தமிழ்ப்பணியும் சிறந்து, அகில உலகும் சென்றடைந்து ஆன்ம ஒளி ஊட்ட எல்லாம் வல்ல சிவபிரானையும், சிவகாமியையும் பணிந்து வாழ்த்தி, கண்ணுறும் அன்பர்கள் கயிலைநாதனின் அருளுக்கு பாத்திரமாவார்கள் என்று ஆசி கூறுகிறோம்.

திருச்சிற்றம்பலம்



கு.வைத்தியநாதன்
3.8.2009



சக்தி அ. ஏழுமலை
தமிழாசிரியர் (ஓய்வு)
பண்ருட்டி வட்டத் தலைவர்,
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கம் (MASM),
பண்ருட்டி, கடலூர் மாவட்டம்

அணிந்துரை

திரு. கவிதை ஜா. கணேசன் அவர்கள் பண்ருட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்தவர் என்ற முறையிலும் பல்வேறு தருணங்களிலும் அவருடைய கவிதைகளை கண்ணுறும் வாய்ப்பு பெற்றவன் என்ற முறையிலும் அவரை நான் நன்கு அறிவேன். எளிய நடையில் சாதாரணமாக தமிழ் படிக்கத் தெரிந்தவர்களுக்கும் விளங்கும் வகையில் அவருடைய கவிதைகள் இருக்கும். அனைத்து சமய பண்டிகைகளுக்கும், சுதந்திர தினம், குடியரசு தினம், நாட்டின் தலைவர்கள் பிறந்த நாட்கள் போன்ற நன்னிகழ்வுகளுக்கும் இவர் கவிதைகள் மூலம் வாழ்த்து தெரிவிப்பார். பல்வேறு அசாதாரண நிகழ்வுகளான சுனாமி, வெள்ளம், பூகம்பம், அமெரிக்க கோபுர தகர்ப்பு, மும்பை குண்டு வெடிப்பு போன்றவற்றிற்கு இவர் எழுதிய கவிதைகள் நெகிழ வைத்து துக்கத்தின் எல்லைக்கு எடுத்துச் செல்வதாக இருந்தன. அடிக்கடி இவரின் குரலினை வானொலி, தொலைக்காட்சி நேரடி ஒலி, ஒளிபரப்பில் கேட்டுள்ளேன். பொதுச் சேவை மற்றும் ஆன்மீகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இவரின் "நால்வர் பாமாலை" கவிதை நூலை கண்ணுற்றேன். மிக எளிதாக படிக்கவும், புரிந்து கொள்ளும் நிலையிலும் எழுதி உள்ளார். இவரின் தமிழ்ப்பணியும், சமயங்கள் கடந்த ஆன்மீகப் பணியும், வலைதளம், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கை, அரங்க மேடைகள் போன்ற ஊடகங்களின் மூலம் உலகம் முழுவதும் சென்றடைந்து தமிழ்மணம் பரப்பிட எல்லாம் வல்ல ஓம் சக்தியை வணங்கி பதினாறு பேறும் பெற்று நீடுழி வாழ்ந்திட உளமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

இடம் : பண்ருட்டி

அ. ஏழுமலை
தமிழாசிரியர்

வாழ்த்துரை




சிவாயநம
திருச்சிற்றம்பலம்

வ.முனிரத்தினம்
திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம்,
சைவ சிந்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்,
8/112 - A, காமராஜ் நகர்,
ஊத்தங்கரை – 635 204
கிருஷ்ணகிரி மாவட்டம், செல் : 94436 36993

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இலைக்
கண்ணின் நல்லஃது உறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே :
– திருஞான சம்பந்தர்

"அருளில் பெரியது
அகிலத்தில் இல்லை"

அருளைப் பெற
அடியார்களுக்கு
தொண்டு செய்,
ஆண்டவனை வணங்கு
அன்பே சிவம்.



சிவ அன்பர் கவிதை கணேசன் அவர்களின் நால்வர் பாமாலை மலர் சிறக்கவும், இவர் தமிழ் தொண்டு வளரவும் எம்பெருமான் சிவனை நினைந்து வாழ்த்துகிறோம்.

வாழ்க! வளர்க! சிறக்க சிவ தொண்டு!

நன்றி. வணக்கம்.

அன்புடன்...

வ.முனிரத்தினம் 13/6/13



சிவாயநம

சித்தாந்த ரத்னா
கவிதை. J. கணேசன்,
Dy. Manager, Q.C, TNCSC.,
675 முத்தையா நகர், L.N. புரம்,
பண்ருட்டி – 607 106.
செல் : 9245103471
blog : www.kavithaiganesan.wordpress.com
twitter / facebook / kavithaiganesan,
www.google/kavithaiganesan,
email : kavithaiganesan@gmail.com

ஆசிரியர் உரை

இப்புவி உலகிற்கு தாய்தமிழே மந்திர சக்திவாய்ந்த மொழி என்பதை உணர்த்தும் வகையில் பல பதிகங்களைப்பாடி இறந்தவரை உயிர் எழுப்பியும், திறக்க முடியாத கதவைத் திறந்து மூடியும், கல்லை தெப்பமாக மாற்றியும், நஞ்சினை அமுதமாகச் செய்தும் பல்வேறு அற்புதங்களைச் செய்த சிவனடியார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சைவ சமய ஆன்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளை 'நால்வர் பாமாலை' என்ற கவிதை நூலின் வாயிலாக வழங்குவதற்கு நான் பெரிதும் புண்ணியம் செய்துள்ளேன். எனது குரு மெய்ஞானவள்ளல், சிவப்பழம் திருவாடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மைய இயக்குநர் திரு. **கு. வைத்தியநாதன்** ஐயா அவர்களும், நான் படித்த பண்ருட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் திரு. **சக்தி அ. ஏழுமலை** அவர்களும், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, திருவாடுதுறை ஆதீன சைவ சிந்தாந்த பயிற்சி மைய அமைப்பாளர் திரு.**வ.முனிரத்தினம்** அவர்களும் இந்நூலுக்கும், எனக்கும் ஆசிகூறி தமிழுலகுக்கு பரிந்துரை செய்துள்ளார்கள். அவர்கட்கு எனது பணிவான நன்றியைக் காணிக்கை யாக்குகின்றேன். இந்நூலை பதிப்பித்த பிரகதி அச்சகத்தார்க்கும் நன்றி. தமிழுலகம் இதனை ஏற்று குறைநிறை சுட்டுமாறும், ஆதரவு நல்குமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

பணிவுடன்

கவிதை **J. கணேசன்**



திருஞானசம்பந்தர்
வரலாறு



காவிரி நீர்பாய்ந்து கழனியெல்லாம் நெல்விளைந்து
சோறுடை சோழநாட்டு பன்னிரு திருநாமத்து
சீர்காழி சட்டைநாதர் பெரியநாயகியோடு வீற்றிருக்க
சிவபாத இருதயரும் பொற்புடைய பகவதியும்

செய்திட்ட பூர்வ புண்ணியத்தின் பயனாக
சம்பந்தன் புவிமீது சைவம்ஓங்க பிறந்துநல்
குளத்தினில் நீராட சிவபாத இருதயர்
தலைமூழ்கிட, காணாத குழந்தை வெறுண்டு

அம்மே அப்பாவென அழுதிட தோணிபுரத்தான்
உமையைப் பாலூட்ட உவகையோடு பணித்திடவே
அழுதிட்ட பிள்ளைக்கு அன்னை அமுதூட்ட
நீராடி கரையேறிய தந்தைமுன் தனயனும்

கடைவாயில் பால்வழிய கண்டே துணுக்குற்று
எச்சில்பால் அளித்தது யாரெனக் கடிந்தேக
ஞானப்பால் முங்கிட்ட பிள்ளையும் வாய்திறந்து
தோடுடைய செவியன் எனப்பதிகப் பாட்டோத

தந்தையின் தோள்மீதில் தம்பிரான் அமர்ந்தேகி
தலமெலாம் சுற்றிவர பிள்ளையும் புறப்பட்டெழ
கோலக்கா கோவிலிலே கையினால் தாளமிட
பொற்றாளம் இறைநல்க இசையோடு இலயம்சேர

திருநீலகண்ட பெரும்பாணர் மதங்க சூளாமணியொடு
யாழிசை சேர்ந்திசைக்க தில்லையுடன் திருத்தலங்கள்
பலஏகி பதிகம்பல பாடிநிதம் பரவிடவே
அரத்துறையின் அந்தணரின் கனவினில் இறைவிளக்க

சிவிகையோடு இடக்குடையும் ஊதக்குளவு பொற்சின்னங்கள்
கோவில்முன் கண்டெடுத்து பிள்ளைக்கு பரிசளிக்க
பாச்சிலாசிராமத்து கொல்லி மழவன்மகள் நோய்நீக்கி
குளிர்சுரத்து செங்குன்றூர் மக்களின் துயர்போக்கி

பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர் பரமன் தந்துநிற்க
யாழ்முரிபண் பாட்டிசைத்து பாணரது யாழ்முரித்து
திருமருகல் திருத்தலத்தில் அரவமது தீண்டிமாண்ட
பெண்கணவனை உயிர்ப்பித்து வீழிமிழலையில் படிக்காசு

பெற்றுலகின் பசிபோக்கி மறைகாட்டு கதவத்தை
மூடிடவே பாட்டிசைத்து அப்பரும் நாள்கோள்கள்
நலமிலை எனப்பகர கோளறு பதிகமதை
அவனிக்கு அளித்துதவி, பாண்டிநாட்டு சமணர்களை

அனல்வாதம் புனல்வாதமிட்டு மன்னவனின் வெப்புநீக்கி
மயிலையில் மங்கையை குடசாம்பலில் உயிரெழுப்பி
நல்லூர் பெருமணத்தில் திருமணம் நனிபுரிவித்து
திருநீலநக்கர், பெரும்பாணர், சிவிகையரோடு பெருஞ்சோதியில்

சம்பந்தன் இரண்டற கலந்தேகி கயிலைசேர
ஆளுடை பிள்ளையும் பதினாறாண்டு புவிசெய்த
சைவசமய பதிகங்களை மனமுருகி பணிந்தேத்தி
பாருலகில் பல்வேறு புண்ணியமும் பெற்றுய்வோமே !



திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறு

கங்கை யன்ன பெண்ணையாறு வடபால்திகழ
செங்கை மிக்கு கெடிலநதி தென்பாலோட
மூன்று போகமுள திருமுனைப்பாடிநாட்டு ஆமூர்தலத்து
வேளிர்குல மாதினி–புகழனார் மகிழ்ந்துபெற்ற மருள்நீக்கியார்

தமக்கை திலகவதி கலிப்பகையாரின் கரம்பிடிக்க
களமதிலே ஈசனடி கடிந்தேக பாவைநோன்பேற்க
அதிகைத் தலத்தில் சைவத்தொண்டில் வாழ்வோட்ட
சமணம் சார்ந்து தருமசேனர் தரணிவிளங்க

சூலைநோய் சூழ்ந்திடவே உள்ளமும் உடல்சோர
அதிகையில் தமக்கையும் தன்கையால் நீறுபூச
கூற்றாயின வாறுவிளக்ககல திருநாவுக்கரசென ஈசன்அழைக்க
பாதிரிப்புலியூர் மன்னனழைக்க நாவரசர் அதைமறுக்க

நீற்றறையில் ஏழுநாள் மாசில்வீணைபாடி குளிர்ந்திருக்க
ஆலமொடு அமுதும் உண்டுலகில் உயிரோடிருக்க
யானைகொண்டு மிதித்திட அஞ்சுவது யாதொன்றுமிலை
எனக்கரிமா வணங்கி வாழ்த்தி வழிஅகல

கற்றுணைபூட்டி கடலில் பாய்ச்ச நாவரசர்
நமசிவாய மந்திரமோதி தெப்பமாகி கரைஏகிட
பல்லவன் பணிந்திட திருத்தல யாத்திரைமேவ
பெண்ணாகடத்தில் பொன்னார் திருவடிதொழுது உடலில்

சூலமும் இடபமும் சிவபூதம் வந்துபொறிக்க
தில்லையில் அம்பலத்தானின் குனித்த புருவமும்
கொவ்வைச் செவ்வாயை போற்றி ஓதிட
பிள்ளைச் சம்பந்தன் அப்பரென விளிக்க


சத்திமுற்றத்து ஈசன்சொல்படி திருநல்லூரில் திருவடிசூடி
திங்களூர் அப்பூதிமகன் அரவம்தீண்டி எமபதியேக
ஒன்றுகொலாம் எனப்பாடி ஈசனைப்பரவி உயிரோடெழுப்பி
ஆரூர்நம்பிநந்தி நீரில்விளக்கேற்ற ஆதிரைப் பெருவிழாக்கண்டு

புகலூரில் பிள்ளையுடன் அமிர்தகடேசன் கடவூர் அருள
வீழிமிழலையில் பஞ்சம்சூழ படிக்காசால் பசிபோக்கி
மறைகாட்டில் கோவிலது திருக்கதவம் திறப்பித்து
வாய்மூரில் வல்லோனின் திருக்காட்சி பிள்ளைகாட்ட

பழையாறை கோவிலும் சமணரால் பாழியாக
உண்ணா நோன்பேற்று ஊனுடம்பை மிகவருத்த
மன்னனின் கனவினில் மகேசன்கூறி மீண்டெடுத்து
பைஞ்ஞீலியில் ஈசனது பொதிசோற்றில் பசிஆறி

காளத்தி, காசிஏகி கயிலைகாண மார்புதேய ஊர்ந்துசெல்ல
ஈசன்வாக்கால் பொய்கைமூழ்கி திருவையாறில் கயிலைகண்டு
பூந்துருத்தியில் மதுரைமீண்ட பிள்ளையின் சிவிகைதூக்கி
ஆலவாய் அண்ணல்கண்டு இராமேசுரம் நெல்வேலிசென்று

புகலூரில் நெடியநாள் தொண்டாற்றி ஈசனைதொழ
புண்ணியா உன்னடிபோற்ற தாண்டகம் பாடிஅருளி
ஞானவடிவோடு சித்திரைசதயத்தில் ஈசனடி சேர்ந்தாரே!
ஏழாம் நூற்றாண்டில் எண்பத்தொரு ஆண்டுவாழ்ந்து
சைவம்தழைக்க உழவாரத் தொண்டாற்றியோர் பாதம்பணிவோம்!



சுந்தரர் வரலாறு



திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் கிழக்கிருக்க
திருவெண்ணெய் நல்லூர்ஈசன் மேற்கினில் வீற்றிருக்க
தெற்கினில் கெடிலநதியும் வடக்கினில் பெண்ணைஓட
முப்போகம் விளைந்திடும் நாவலூர் எம்பதியில்

அந்தணராம் சடையனார் இசைஞானியார் மகனாகி
நம்பிஆரூரர் எனநாமமோடு அரசனாம் நரசிங்கமுனையரின்
கருணையொடு கல்வி கேள்வி சிறந்து
புத்தூரின் சடங்கவி சிவாச்சாரியார் மகளைமணம்புரிய

பந்தலில் சிவபிரான் தடுத்தோலை நீட்டிநிற்க
நம்பிஆரூரர் நமக்கடிமை என்றுகூவி வாதுமிட
ஓலையைக் கிழித்தெறிந்து பித்தனெனக் கடிந்தேக
வெண்ணெய்நல்லூர் சபையோரிடம் பொதுமன்றில் வழக்காட

கிழித்தது படிவோலையென மூலஓலை பிரானளிக்க
வாதிட்டோர் யாரெனகிழவர் கோவிலுள் சென்றுமறைய
தடுத்தாண்ட எம்பிரான் பித்தாஎன அடிகொடுக்க
பித்தா பிறைசூடிஎன சுந்தரர் தமிழ்பாட

திருத்தல யாத்திரையில் திருவதிகை தலமருகில்
சித்தவட மடமதிலே துயில்கொள்வார் தலைமீது
எம்பிரான் வேதியராய் கால்நீட்டி அருள்வழங்க
தம்மானை அறியாத சாதியார் உளரோஎன

திருப்பதிகம் பாடியின் தில்லைநகர் வந்தேகி
மானாட மழுவாட மங்கை சிவகாமியாட
கூத்தாடும் பெருமான் அசரீரியாய் ஆருர்அழைக்க
சீர்காழி வழியேகி திருவாரூர் வன்மீகநாதர்

தோழரென செப்பிட தம்பிரான் தோழராகி
பரவையாரிடம் மையலாகி பைங்கிளியை மணம்புரிந்து
தில்லைவாழ் அந்தணர்க்கு அடியார்க்கு அடியேன்என
திருத்தொண்டத் தொகைபாடி குண்டையூர் கீழார்கொடை

நெற்குவியலை பதிகம்பாடி சிவகணங்கள் ஆரூர்சேர்க்க
கோட்டிலிநாயனார் மக்கள் சிங்கடியார், வனப்பகையாரை
தம்மக்களாய் தம்பிரான் அருளோடு ஏற்பளிக்க
பங்குனி உத்திரவிழா பரவையார் கொண்டாட

திருப்புகலூர் கோயிலில் இச்சைபேசினும் பதிகமிசைத்து
செங்கல்லை பொன்கல்லாய் மாற்றியே புகழ்பாடி
முதுகுன்றத்து இறையருளால் பன்னீராயிரம் பொன்பெற்று
மணிமுத்தா நதியிலிட்டு ஆரூர்கமலாலயத் தெடுத்து

திருக்கருகாவூர் பிரானளித்த பொதிசோறு பெற்றுண்டு
திருக்கச்சூரில் சிவனாரின் பிச்சையை பணிந்தேற்று
திருஒற்றியூர் தலமேகி சங்கிலியாரை மாலைசூடி
பிரிந்ததால் கண்ணொளி இழந்து கதறிஅழ

திருவெண்பாக் கோவிலில் ஊன்றுகோல் இறையளிக்க
கச்சி ஏகம்பர் இடக்கண் பார்வைத்தர
திருவாடுதுறை குளம்மூழ்கி புகர்நோய் நீக்கம்பெற
மீளா அடிமை உமக்கே ஆளானாய்

என்றே ஆரூரானைபாடி வலக்கண் பார்வைபெற
பரவையார் வீடேக பலரிடம் தூதனுப்ப
ஏற்றிடா பேதைமகள் பிராணனை விடவிழைய
தோழனாம் ஆரூரானைத் துணைவியின் ஊடல்போக்க

தூதனாய் செல்ல வேண்ட இறைதூதுபோக
மறுத்திட்ட மாதுசொல்லை சுந்தரர் வசம்செப்ப
இரண்டாம் தூதுக்கும் இறைவனே எழுந்தருள
வந்தது மகேசனென மனையாளும் மனம்ஒப்ப

சுந்தரர் மனம்மகிழ இல்லறம் இனிதேக
ஏயர்கோன் கலிக்காம நாயனார் எதிர்குரலெழுப்ப
சூலைநோய் இறைஏவ சுந்தரரே நேர்வர
வாளால் தன்வயிற்றை நாயனார் கிழித்தெறிய

வன்தொண்டர் உடனழிய உரைசெய்ய இறைதடுக்க
இறந்தவர் உயிர்த்தெழ சேரமான் பெருமான்காண
அவினாசி நகரினிலே முதலையின் வயிறடைந்த
ஓராண்டு வளர்ச்சியுடன் மைந்தனை உயிரெழுப்பி

அஞ்சைக் களத்தினிலே சேரமான் பெருமானோடு
சிலநாள் சிறப்பெய்தி வெறுத்தேன் மனைவாழ்க்கை
விட்டொழித்தேன் என்று விளம்பி இறைவனிடம்
வெள்ளையானை மீதேறி கயிலையானைக் காணஏகி

சிவபிரான் பாதம்தொட்டு, சேரமானை உடனழைத்து
சிவகணத்து தலைவனாக்கி ஆலால சுந்தரராகி
பரவையார் சங்கிலியாரும் கமலினி அநிந்திரையாகி
கயிலை நாதனைக் காலமும் தொழுகிறாரே !

புவிமீது பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்திடினும்
வன்தொண்டர் ஏவலராய் ஆண்டவனை ஏவிநிற்க
சுந்தரர்தமிழோ உலகுள்ளவரை சைவம் பரப்பும் !
பண்ணோடு இசைபாடி பரமனின் அருள்பெறுவோமே !



மாணிக்கவாசகர் வரலாறு



வைகைநதி வழிந்தோட வண்ணமலர் பூத்தோங்க
மாதம் மும்மாரி மழைபெய்து புவிகுலுங்க
நீர்நிலைகள் நிறைந்தோங்க பாண்டிய நாடுதன்னில்
வேதமோடு செல்வமெலாம் தழைத்தோங்க திருவாதவூரில்

சம்புபாதாசிரியர் சிவஞானவதியார் இனிதீன்ற திருமகனாம்
வேதமொடு அறுபத்து நான்குகலை கற்றிலங்க
அரிமர்த்தன பாண்டியன் அவைதனில் மந்திரியாக்க
தருமமிகு ஆட்சிதன்னை மக்களுக்கு வழங்கிநல்

வேதாகம நூலாய்ந்து சிவனாரை சிந்தைசெய்து
மன்னனின் அவைதனிலே குதிரைகள் குறைந்துவிட்ட
கொள்கையை காவலர்கள் கொற்றவன்பால் குறைசொல்ல
அராபியக் குதிரைகளை கண்டாய்ந்து வாங்கிவர

கருவூலத்து திரவியத்தை கைக்கொண்டு வாதவூரரை
ஒட்டகத்து மேலேற்றி ஊர்போக ஆணையிட
பொற்றாமரை குளமாடி சோமசுந்தரரை தரிசித்து
திருப்பெருந்துறை சார்ந்து சிவனாரில் கோயில்புக

குருந்த மரநிழலில் ஞானதேசிகன் உபதேசிக்க
ஆணவம் கன்மம் மாயைகளை போக்கிடவே
ஊனும் உள்ளமும் உருகிட உள்ளொளியாகி
மாணிக்கவாசக என்றே ஞானாசிரியன் அழைத்திடவே

குதிரை வாங்கும் பொற்குவியலை அந்தணர்க்கும்
திருக்கோயில் திருப்பணிக்கும் திருவிழா சிறப்புக்கீய
ஆடிமாதம் வரவேண்டிய பரிகள்நகர் வராததால்
அரசனும் அனுப்பினான் தூதோலை ஆங்கவர்க்கே

ஆண்டவனைத் தொழுதே வேண்ட அசரீரி
குதிரை வரும்என பதில்ஓலை பகர ஆணையிட
மறுஓலை அவ்வாறெழுத மன்னன் மனம்ஒய
சின்னாளில் ஞானாசிரியன் நேர்தோன்றி குதிரைவரும்

முன்செல் எனமுழங்க வாதவூரர் நாடேக
மன்னனும் குதிரைவரும் நாள்கோர, வருமென
பதிலிருத்தவர் தலைமீது பாறாங்கல் சுமைவைக்க
தண்டனைய்யைக் கடவுள்ஏற்று மறுநாள் சிவகணங்கள்

நரிகளைப் பரிகளாக்கி இறைவனைத் தலைவனாக்கி
கயிறுமாற்றி குதிரைஒப்ப மன்னன்லாயம் குதிரைசேர
ஞாயிறுபோய் இரவுவர பரிகளெலாம் நரிகளாகி
ஊவென ஊளையிட்டு ஊர்துறந்து காடேக

மதிபொங்க மன்னவனும் வாதவூரரை தண்டிக்க
ஆண்டவனும் ஆணையிட வைகைநதி கரைபுரள
வெள்ளநதி மதுரையின் வீதிகளில் புகுந்தோட
வீட்டுக்கு ஒருவர்வர கரையடைக்க முரசறைய

வந்திஎனும் மூதாட்டி பங்கடைக்க இயலாமல்
கூலியாள் தேடிடவே மண்வெட்டியுடன் இறைவன்வர
பிட்டுக்கு மண்சுமக்க ஒப்பந்தம் செய்துஉண்டு
கரைஓரம் உறங்கிட மன்னவன் கண்டுதேன்

பிரம்பினால் அடிகொடுக்க பரமனின் முதுகில்விழ
அகிலத்து ஜீவனுக்கும் திடுமென அடிவிழ
கூடையிலே மண்சுமந்து கரையடைத்து சோதியாய்
மன்னனுக்கு வாதவூரர் பெருமையை அசரீரிசொல்ல

கொற்றவனும் மணிவாசகர் பதம்பணிந்து அருள்வேண்ட
தலயாத்திரை புறப்பட்டு ஈழநாடு இனிதேகி
ஈழமன்னன் ஊமைப்பெண் உடன்வர தில்லையேகி
பேசாதவளை பேசவைத்து புத்தனை சமர்வென்று

சைவமே உயர்ந்ததென திருச்சாழல் பதிகம்பாடி
நமச்சிவாய வாழ்கவென பாவையை பாடிநிற்க
கோவை பாடிடவே கூத்தன்வேண்ட ஓலைஎழுதி
மணிவாசகன் சொல்ல சிற்றம்பலத்தான் கையெழுத்திட

அம்பலத்தில் அனைவர்நோக்க ஒளியாகி ஆண்டவனடி
இரண்டறக் கலந்திட்டார் இகவாழ்வை உதறிட்டார்
முப்பத்திரண்டு ஆண்டுகள் புவிவாழ்ந்து நமக்கு
திருவாசகத் தேன்அளித்தான் தெவிட்டாது உணர்வோம்நாம்!



சிவஞான போதம்

நூற்பாக்கள்

மெய்கண்ட சாத்திரங்களும், பண்டார சாத்திரங்களும், சைவ சித்தாந்த கோட்பாடுகளை விளக்கும் நூல்கள். இவற்றுள் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் தலையாய நூல். இந்நூலைச் சைவ சித்தாந்தம் பயில்வோர் இன்றியமையாது கற்றல் வேண்டும். இதற்குப் பலர் உரை எழுதி உள்ளனர். இவ்வுரை நூல்களில் முடிமணியாகத் திகழ்வது திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவர்களில் ஒருவரான மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதிய மாபாடியம் ஆகும். இன்னோரன்ன உரை நூல்களைப் பயில்வோர் நிகண்டு கற்று இலக்கிய இலக்கணப் புலமை பெற்றவராதல் வேண்டும்.

1. பிரமாண இயல்

முதல் நூற்பா - பதி உண்மை

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இரண்டாம் நூற்பா - பாச உண்மை

அவையே தானே யாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

மூன்றாம் நூற்பா - பசு உண்மை

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படின்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

இலக்கணவியல்

நான்காம் நூற்பா - பசு இலக்கணம்

அந்தக் கரண மவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்தது ஆன்மா சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே

ஐந்தாம் நூற்பா - பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

ஆறாம் நூற்பா - பதி இலக்கணம்

உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என
இருண்டு வகையின் இசைக்கும் மன் உலகே.

சாதனவியல்

ஏழாம் நூற்பா - சாதகன் இயல்பு

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்துஇலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

எட்டாம் நூற்பா - சாதனப் பயன்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

ஒன்பதாம் நூற்பா - சாதிக்கும் முறை

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்துஎனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

பத்தாம் நூற்பா - மல நீக்கம்

அவனேதானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே.

பதினொன்றாம் நூற்பா - சிவத்துவப் பேறு

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

பன்னிரெண்டாம் நூற்பா - சீவன்முத்தர் செயல்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

– மெய்கண்டார்

– திருச்சிற்றம்பலம் –

நால்வர் பாமாலையில் கண்ட பாடல்களை திருவதிகை, திருநாவலூர், திருவாமூர், சித்தவடமடம், பண்ருட்டி ஆகிய இடங்களில் உள்ள சிவன் கோயில்களில் கவிதை கணேசன், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரது வாழ்க்கை வரலாற்றை கவிதையாக சொல்வதை வீடியோ படமாக வலைதளத்தில் காணலாம்.

Nalvar Pamalai - Part 1 to 8

googleல் அல்லது youtubeல் காணலாம்

googleல் kavithaiganesan என்று Type செய்தால் 100க்கும்மேல் கவிதை கணேசனின் குறும்படங்களை (Documentary Film) காணலாம்.